**செய்தி வெளியீடு எண்: 91/2023** **நாள்: 05.08.2023**

**பத்திரிக்கைச் செய்தி**

**மாரத்தான் பங்கேற்பாளர்களின் வசதிக்காக நாளை (06.08.2023) சிறப்பு மெட்ரோ இரயில் சேவைகள் அதிகாலை 3.40 மணி முதல் இயக்கப்படுகிறது**

கலைஞர் நூற்றாண்டு சர்வதேச மாரத்தான் நாளை 06.08.2023 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறுகிறது. இதனையொட்டி மாரத்தான் பங்கேற்பாளர்களின் வசதிக்காகவும், அவர்களுக்கு இடையூறு அற்ற எளிமையான பயண அனுபவத்தை வழங்கும் வகையில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் கலைஞர் நினைவு சர்வதேச மாரத்தான் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. அதன்படி, மாரத்தான் பங்கேற்பாளர்கள், மெட்ரோ இரயில் நிறுவனத்தின் QR குறியீடு போடப்பட்ட அட்டையை பயன்படுத்தி, நாளை (06.08.2023) அதிகாலை 3.40 மணி முதல் மதியம் 12.00 மணி வரை (இருமுறை மட்டும் – Round Trip), மெட்ரோ இரயிலில் எவ்வித கட்டணமும் இன்றி பயணம் செய்து கொள்ளலாம்.

இதற்கான சிறப்பு மெட்ரோ இரயில் சேவைகள் மாரத்தானில் பங்கேற்பவர்களுக்கு மட்டும் பின்வரும் அட்டவணையின் படி இயக்கப்படுகிறது.

| புறப்படும் மெட்ரோ இரயில் நிலையம் | சென்றடையும் மெட்ரோ இரயில் நிலையம் | நேரம் |
|---|---|---|
| சைதாப்பேட்டை | அரசினர் தோட்டம் | 3.40 am |
| சின்ன மலை | | 3.50 am |
| கிண்டி | | 3.55 am |
| விமான நிலையம் | | 4. 00 am |
| விம்கோ நகர் | | 4.00 am |
| விமான நிலையம் | | 4.10 am |
| பரங்கிமலை மெட்ரோ | புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ நிலையம் | 4.00 am |
| புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி.ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ நிலையம் | பரங்கிமலை மெட்ரோ | 4:00 am |

வழக்கமான மெட்ரோ இரயில் சேவைகள் காலை 5.00 மணி முதல் இயக்கப்படும். மாரத்தான் பங்கேற்பாளர்கள் முழுமையாக இந்த வசதியை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

@cmrlofficial Chennai Metro Rail @chennaimetrorail

@ChennaiMetroRail www.chennaimetrorail.org